தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| இயக்குநர், | முதல்வர்கள், |
| தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், | அனைத்து அரசு /அரசு உதவி |
| சென்னை – 600 025. | பெறும் / சுயநிதி பொறியியல் கல்லூரிகள். |

கடித எண். 034346/ஜே1/2026, நாள்:08.10.2026

ஐயா,

பொருள்: தொழில்நுட்பக் கல்வி – பொறியியல் கல்லூரிகள் – அண்ணா பல்கலைக்கழகம் – அதிகபட்ச படிப்புக் காலத்தை கடந்த மாணாக்கர்களுக்கான ஒருமுறை சிறப்பு மறு சேர்க்கை – இறுதியாண்டு இளநிலைப் பட்டப்படிப்பில் (UG) VIII பருவம் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பில் (PG) IV பருவத்தை மட்டும் நிறைவு செய்ய வேண்டிய மாணாக்கர்கள் – 2026–27 ஆம் கல்வியாண்டின் Even Semester – மறு சேர்க்கைக்கான விண்ணப்பங்களைப் பெற்று அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை: அண்ணா பல்கலைக்கழகத்தின் 14.07.2026 நாளிட்ட ஒருமுறை சிறப்பு அனுமதி அறிவிப்பு.

*******

அண்ணா பல்கலைக்கழகத்தால், 2015–2016 ஆம் கல்வியாண்டு முதல் சேர்க்கை பெற்ற, அந்தந்த கல்வி ஒழுங்குமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச கல்விக்காலத்திற்குள் தங்களது இளநிலை அல்லது முதுநிலைப் பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்யாத தகுதியான மாணாக்கர்களுக்கு, குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒருமுறை (One–Time Special Permission for Readmission) சிறப்பு அனுமதியின் அடிப்படையில் மறு சேர்க்கை செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2026–27 (Even Semester) இறுதியாண்டு இளநிலைப் பட்டப்படிப்பில் (UG) VIII பருவத்தையும், முதுநிலைப் பட்டப்படிப்பில் (PG) IV பருவத்தையும் மட்டும் நிறைவு செய்ய வேண்டிய தகுதியான மாணாக்கர்களின் மறு சேர்க்கை விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான நடவடிக்கைகள் இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட உள்ளன.

எனவே, தங்கள் கல்லூரியில் மேற்கண்ட சிறப்பு அனுமதியின் கீழ் மறு சேர்க்கைக்குத் தகுதியுடைய, UG VIII பருவம் / PG IV பருவத்தை மட்டும் நிறைவு செய்ய வேண்டிய மாணாக்கர்கள் இருப்பின் இணைப்பில் உள்ள மறு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை தகுதியான மாணாக்கர்களிடமிருந்து முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் இணைத்து, 06.11.2026க்குள் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு– சிறப்பு மறு சேர்க்கை விண்ணப்பம்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்காக

8/10/26

நகல்: பதிவாளர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை–25.

# தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை

## சிறப்பு மறு சேர்க்கை விண்ணப்பப் படிவம்

**2026-27 ஆம் கல்வியாண்டு - Even Semester Only (UG-VIII / PG-IV)**

### 1. மாணாக்கரின் தனிப்பட்ட விவரங்கள்

| | |
|---|---|
| 1. மாணவர் பெயர் (CAPITAL LETTERS-ல் எழுதவும்) | |
| 2. தந்தை / தாய் / பாதுகாவலர் பெயர் | |
| 3. பிறந்த தேதி | |
| 4. கைபேசி எண் | |
| 5. மின்னஞ்சல் முகவரி | |
| 6. நிரந்தர முகவரி | |

### 2. கல்வி விவரங்கள்

| | |
|---|---|
| 1. சேர்க்கை பெற்ற கல்வியாண்டு | |
| 2. சேர்க்கை முறை (Admission Mode) | [ ] UG FYR [ ] UG LE (Lateral Entry) [ ] PART TIME |
| 3. பதிவெண் (Registration No.) | |
| 4. படிப்பு (Degree) | [ ] B.E [ ] B.Tech [ ] B.Arch [ ] M.E [ ] M.Tech [ ] M.Arch |
| 5. பட்டப்படிப்பு / பாடப்பிரிவு (Branch) | |
| 6. கடைசியாகப் படித்த கல்லூரியின் பெயர் மற்றும் முழு முகவரி | |
| 7. கல்லூரி குறியீடு (College Code) | |
| 8. பருவம் தொடர்பான விவரங்கள் | • இதுவரை நிறைவு செய்த பருவம்: ______________<br>• தற்போது நிறைவு செய்ய வேண்டிய பருவம்:<br>[ ] UG - VIII பருவம் [ ] PG - IV பருவம் |

### 3. மறு சேர்க்கை தொடர்பான விவரங்கள்

| | |
|---|---|
| 1. படிப்பு நிறுத்தப்பட்ட Semester / Year | |
| 2. Last Semester Percentage of Attendance | |
| 3. படிப்பை நிறுத்தியதற்கான காரணம் | |
| 4. அதிகபட்ச படிப்புக் காலம் முடிவடைந்த கல்வியாண்டு / தேதி | |
| 5. இதற்கு முன் மறு சேர்க்கை / சிறப்பு அனுமதி பெற்றுள்ளீர்களா? | [ ] ஆம் [ ] இல்லை |
| 6. ஆம் எனில், அதன் விவரம் மற்றும் பதிவெண் (Reg. No.) | |
| 7. சம்பந்தப்பட்ட பாடப்பிரிவு தற்போது கல்லூரியில் வழங்கப்படுகிறதா? | [ ] ஆம் [ ] இல்லை |

| | |
|---|---|
| 8. கல்லூரி தன்னாட்சி பெற்றதா? (Autonomous / Non-Autonomous) | [ ] Autonomous [ ] Non-Autonomous |
| 9. தன்னாட்சி எனில், எந்த வருடம் Autonomous அந்தஸ்து வழங்கப்பட்டது? | |

## 4. மாணாக்கரின் உறுதிமொழி

**மாணவர் கீழ்க்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக உறுதி அளிக்க வேண்டும்:**

- தன்னாட்சி பெற்ற (Autonomous) கல்லூரிகளில் சிறப்பு மறுசேர்க்கை பெறும் நான், சம்பந்தப்பட்ட கல்லூரியால் நிர்ணயிக்கப்படும் Equivalent / Additional Papers இருப்பின், அவற்றை அந்தந்தக் கல்லூரி மூலமாகவே பயின்று, உரிய தேர்வுகளை எழுதுவேன் என்று அறிவேன்.
- தன்னாட்சி பெறாத (Non-Autonomous) கல்லூரிகளில் சிறப்பு மறுசேர்க்கை பெறும் நான், அண்ணா பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்படும் Equivalent / Additional Papers இருப்பின், அவற்றைக் கட்டாயமாகப் பயின்று, உரிய தேர்வுகளை எழுதுவேன் என்று அறிவேன்.
- எந்தப் பாடத்திற்கும் விலக்கு (Exemption) கோர மாட்டேன்.
- பல்கலைக்கழகம் / கல்லூரி செயல்பாடுகளிலிருந்து விலகி இருக்க அனுமதி கோர மாட்டேன்.
- பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவேன்.
- Re-admission தொடர்பாக பல்கலைக்கழகம் நிர்ணயிக்கும் அனைத்துக் கட்டணங்களையும் உரிய காலத்தில் செலுத்துவேன்.
- Re-admission Order-ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு நடப்பேன்.
- மேற்கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதியளிக்கிறேன். அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் விதிக்கும் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மீதமுள்ள படிப்பினை நிறைவு செய்வேன் என உறுதியளிக்கிறேன். இவ்விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என பின்னர் கண்டறியப்பட்டால், வழங்கப்படும் மறு சேர்க்கை அனுமதி / ஆணை ரத்து செய்யப்படலாம் என்பதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

இடம் : ____________ மாணாக்கரின் கையொப்பம் : ____________

தேதி : ____________ மாணவர் பெயர் : ____________

## 5. கல்லூரி முதல்வரின் சரிபார்ப்பு மற்றும் பரிந்துரை

மேற்கண்ட மாணாக்கரின் கல்விப் பதிவுகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. மாணாக்கர் [ ] UG-VIII / [ ] PG-IV பருவத்தை மட்டும் நிறைவு செய்ய வேண்டியுள்ளது என்பதும், சம்பந்தப்பட்ட பாடப்பிரிவு தற்போது கல்லூரியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதும் சரிபார்க்கப்பட்டது. எனவே, மாணாக்கரின் விண்ணப்பம் 2026-27 ஆம் கல்வியாண்டின் Even Semester-ல் சிறப்பு மறு சேர்க்கைக்காகப் பரிசீலிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

**முதல்வரின் குறிப்புகள்**

தேதி : ____________ **முதல்வரின் கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை**

இடம் : ____________ முதல்வரின் பெயர் : ____________

## இணைக்க வேண்டிய ஆவணங்கள்

- அனைத்துப் பருவங்களின் மதிப்பெண் பட்டியல் நகல்கள் / விவரங்களுக்கான ஆவணம்
- முந்தைய மறு சேர்க்கை / சிறப்பு அனுமதி ஆணை (இருப்பின்)
- கல்லூரியின் தற்போதைய நிலை தொடர்பான விவரம்
- பிற தொடர்புடைய ஆவணங்கள்

## பொதுவான அறிவுறுத்தல்கள்

1. நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எவ்வித பரிசீலனையும் இன்றி நிராகரிக்கப்படும்.
2. மறு சேர்க்கைக்கான விண்ணப்பம், நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. அனைத்து நிலைகளிலும், தொழில்நுட்பக் கல்வி இயக்குநரிடமிருந்து மறு சேர்க்கை ஆணை பெறப்பட்ட பின்னரே, மாணவரை மறு சேர்க்கை செய்ய வேண்டும்
4. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திடமிருந்து மறு சேர்க்கை ஆணை பெறாமல், எந்தவொரு மாணவரும் செய்முறை மற்றும் கோட்பாட்டுத் தேர்வுகளில் பங்கேற்க அனுமதிக்கப்படக் கூடாது.
5. கீழ்க்கண்ட விவரங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும்:
   i) மாணவர் இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத்தின் பெயர்.
   ii) மாணவர் இறுதியாகப் பயின்ற பருவம் (Semester).
   iii) மாணவர் இறுதியாகப் பங்கேற்ற தேர்வு நடைபெற்ற மாதம் மற்றும் ஆண்டு.

6 கீழ்க்கண்ட ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்:
   i) முந்தைய பருவங்களுக்கான மதிப்பெண் பட்டியல்கள்.
   ii) மாணவர் ஒன்றுக்கு மேற்பட்ட முறை மறு சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் நிலையில், இவ்வியக்ககத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட மறு சேர்க்கை ஆணை / ஆணைகளின் நகல் இருப்பின், அவற்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.